சுருக்கம்

ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் – வருவாய்த்துறை – முன்னாள் கிராம அலுவலர்களுக்கு வழங்கப்படும் சிறப்பு ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் மற்றும் முன்னாள் கிராம உதவியாளர்களுக்கு சிறப்பு குடும்ப ஓய்வூதியம் ஆகியவற்றை உயர்த்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## வருவாய்த் (பணி 7(2)) துறை

அரசாணை (நிலை) எண்.40

நாள் 24.1.2008

படிக்கப்பட்டவை:–

1) அரசாணை (நிலை) எண்.828, வருவாய்த்துறை, நாள் 23.8.1996.
2) அரசாணை (நிலை) எண்.629, வருவாய்த் துறை, நாள் 22.7.1998.
3) சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண். வ.நி.2(2)/101795/2004, நாள் 23.11.2005.
4) அரசாணை (3டி) எண்.9, வருவாய்த் துறை, நாள் 28.2.2006.
5) தமிழ்நாடு முன்னாள் கிராம அலுவலர்கள் சங்கக் கோரிக்கைகள் மனு நாள் 14.6.2006 மற்றும் 22.6.2006.
6) சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை நீதிப்பேராணை எண்கள் 10230–10239/2006 இன் தீர்ப்பு நாள் 15.11.2006.
7) அரசு கடித எண்.2532/பணி7(1)/2007–1, வருவாய்த்துறை, நாள் 29.1.2007
8) வருவாய் நிர்வாக துறை இணை ஆணையரின் (வருவாய் நிருவாகம்) கடித எண்.வ.நி.2(2)/25303/2006, நாள் 10.10.2007.

******

ஆணை:–

14.11.1980 இல் வெளியிடப்பட்ட அவசர சட்டத்தால் பதவி இழந்த முன்னாள் கிராம அலுவலர்களுக்கு, சிறப்பு ஓய்வூதியமாக ரூ.175/–ம் மற்றும் குடும்ப ஓய்வூதியமாக ரூ.100/–ம் வழங்கி, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டது. பின்னர், சிறப்பு ஓய்வூதியத்தை ரூ.250/– ஆகவும் மற்றும் குடும்ப ஓய்வூதியத்தை ரூ.150/– ஆகவும் உயர்த்தி வழங்கி, மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டது.

2. 14.11.1980–இல் வெளியிடப்பட்ட அவசர சட்டத்தின் மூலம், பணியிழந்த பின், உச்சநீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் கிராம நிர்வாக அலுவலர்களாக மீண்டும் பணியமர்த்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர்களில் குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் பணிபுரிந்தவர்களுக்கு குறைந்தபட்ச ஓய்வூதியம் அளிக்கப்படுவதைக் கருத்தில் கொண்டு, தற்பொழுது பெற்றுவரும் சிறப்பு ஓய்வூதிய தொகையினை ரூ.250/–லிருந்து ரூ.350/– ஆக உயர்த்தவும் மற்றும் குடும்ப ஓய்வூதியத் தொகையை ரூ.150/–லிருந்து ரூ.250/– ஆக உயர்த்தவும், பரிந்துரை செய்த முன்மொழிவை, மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அரசின் பரிசீலனைக்கு அனுப்பி இருந்தார்.

3. முன்னாள் கிராம அலுவலர்கள் சங்கம் தற்போது தங்களுக்கு வழங்கப்படும் சிறப்பு ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியத்தை உயர்த்தி வழங்குமாறு மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட மனுக்களில் அரசிடம் கேட்டுக் கொண்டுள்ளனர்.

4. இந்நேர்வு அரசின் ஆய்வில் இருக்கும்பொழுது, சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் திரு.ஏ. திருச்செல்வம் மற்றும் ஒன்பது நபர்கள் நீதிப்பேராணை மனு எண்கள் 10230 முதல் 10239/2006 வரை தாக்கல் செய்து, தங்களுக்கு வழங்கும் சிறப்பு ஓய்வூதியத்தை உயர்த்தி வழங்குமாறு வழக்குத் தொடர்ந்தனர். அவ்வழக்குகள் குறித்து மேலே ஆறாவதாகப் படிக்கப்பட்ட சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் தீர்ப்புரையில், மனுதாரர்களின் சங்கம் மூலம் மாண்புமிகு முதலமைச்சருக்கு 31.1.2006–இல் அளிக்கப்பட்ட மனுவில், அவர்களது ஓய்வூதியத்தை ரூ.878/–லிருந்து ரூ.1278/–ஆக உயர்த்த கோரியுள்ளதாகவும், அம்மனுவின் மீது உயர்நீதிமன்ற ஆணை கிடைக்கப் பெற்ற எட்டு வாரங்களுக்குள் நடவடிக்கை எடுத்து மனுதாரர்களுக்கு தெரியப்படுத்துமாறு ஆணையிடப்பட்டுள்ளது.

## முன்னாள் கிராம அலுவலர்கள்

5. (i) சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையரின் முன்மொழிவையும், சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையின் மேற்கண்ட தீர்ப்பினையும் அரசு கவனமாக ஆய்வு செய்தது. முன்னாள் கிராம அலுவலர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் சிறப்பு ஓய்வூதியமான ரூ.250/–யை, ரூ.350/–ஆக அரசாணை வெளியிடப்படும் நாளிலிருந்து உயர்த்தியும், அத்துடன் 1.7.2007–ல் முன்னாள் கிராம அலுவலர்களுக்கு வழங்கப்படும் 69 விழுக்காடு அகவிலைப்படியில் 50 விழுக்காடு அகவிலைப்படியை, அகவிலை ஊதியமாக ஆணை வெளியிடப்படும் நாளிலிருந்து வழங்கலாம் எனவும் அரசு முடிவுசெய்து, அவ்வாறே ஆணையிடுகிறது. அரசாணை வெளியிடப்படும் நாளிலிருந்து முன்னாள் கிராம அலுவலர்களுக்கு கீழ்க்கண்டுள்ளவாறு சிறப்பு ஓய்வூதியம் நிர்ணயிக்கப்படும்:–

| | | |
|---|---|---|
| (i) | சிறப்பு ஓய்வூதியம் | ரூ.350/– |
| (ii) | நிரந்தர அகவிலைப்படி (182%) | ரூ.455/– |
| (iii) | அகவிலை ஓய்வூதியம் | ரூ.175/– |
| (vi) | கூடுதல் அகவிலைப்படி 19% (350+175) (1.7.2007–இன்படி) | ரூ.100/– |
| (v) | மருத்துவப்படி | ரூ. 50/– |
| | மொத்தம் | ரூ.1130/– |

(ii) மேலும், முன்னாள் கிராம அலுவலர்களின் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் குடும்ப ஓய்வூதியத் தொகையான ரூ.150/–யுடன் நிலையான அகவிலைப்படி ரூ.250/–ஐ சேர்த்து ரூ.400/–ஆக உயர்த்தி வழங்கலாம் எனவும் அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

## முன்னாள் கிராம உதவியாளர்கள்

6. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்ட தமிழ்நாடு கிராம உதவியாளர்களுக்கான ஓய்வூதிய விதிகள் 1995–இன்படி முன்னாள் கிராம

உதவியாளர்களின் குடும்பத்திற்கு சிறப்பு குடும்ப ஒய்வூதியமாக ரூ.150/- வழங்கப்பட்டு வருகிறது. இதனை பிறபடிகள் ஏதுமின்றி ரூ.400/-ஆக உயர்த்தி வழங்கலாம் எனவும் அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

7. மேலே பத்திகள் 5(i), 5(ii) மற்றும் 6-இல் பிறப்பிக்கப்பட்டுள்ள ஆணைக்கு பணப்பயன்கள் அனைத்தும் அரசாணை வெளியிடப்படும் நாள் முதல் வழங்கலாம் எனவும் ஆணையிடப்படுகிறது.

8. இவ்வரசாணை நிதித்துறையின் ஒப்புதலோடு (அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 9/JS(MP)/2008, நாள் 24.1.2008) வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அம்புஜ் சர்மா,
அரசுச் செயலாளர்

பெறுநர்

சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை-5.
அனைத்து மாவட்டாட்சியர்கள்.
மாநில கணக்காயர், சென்னை-18/35.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை 5/9/79.
சம்பள கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.

நகல்

தலைவர்,
உரிமை பாதுகாப்பு கமிட்டி,
தமிழ்நாடு முன்னாள் கிராம அலுவலர்கள் சங்கம்,
எண்.9, இராமகிருஷ்ணாபுரம் முதல் தெரு, சென்னை - 33.
நிதித் (ஓய்வூதியம்) துறை, சென்னை-9.
வருவாய் (பணி 8(1) துறை, சென்னை-9.
இ.கோ/உ.திரி.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

11.2.08

பிரிவு அலுவலர்